கடவுள் துணை.

# கலாதரங்கிணி.

புத்தகம் ௧.] ௧௮௮௬௵ அக்டோபர்௴ [சஞ்சிகை ௯.

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

ஆனந்த மயமாகி யருவாகி யகிலமா யான்றபொற் சோதியாகித்
தானந்த மில்லாத் தனிப்பெருந் தகவொடவ தாரம் பயின்ற தாகி
ஈனந் தவிர்த்தெம்மை யாள்வானெ ரருளினொ லெளியவர்ச் சையுமாகி யுள்
வானந் தழைத்தோங்க வொளிருமொரு பொருவிலா வத்துவை வணங்கல்
[செய்வாம்.

## துருவசரித்திரம்.

சுவாயம்பு மனுவுக்கு சதரூபி என்னும் மனையாளிடத்து பிரியவிரத னென்றும் உத்தானபாத னென்றும் இரண்டு பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்களில் உத்தானபாதனுக்கு சுருசி, சுநீதியென்று மனைவிய ரிருவரிருந் தார்கள். அவர்களுள் சுருசி உத்தானபாதனுக்குப் பிரியமுள்ளவளா யிருந் தாள். அவளுக்கு உத்தமனென்று ஒருகுமாரன்பிறந்து தகப்பனுக்கு மிக வும் பிரியனாயிருந்தான். சுநீதியென்பவள் புருஷனுக்குப் பிரியமில்லாத வளாயிருந்தாள், அவளுக்குத் துருவன் என்கிற குமாரன் பிறந்து சகல ~~குணாபிராமனா~~க இருந்தான். ஒருநாள் அவன், சிங்காசனத்தில் வீற்றிருந்த தன்தகப்பன்மடியிலுட்கார்ந்திருந்த வுத்தமனைப்பார்த்துத் தானும் அப்படி உட்காரவேண்டுமென்று கிட்டப்போனான். அப்போது தகப்பன் சுருசி எதி ரிலிருந்தபடியினாலே மகனுடைய எண்ணத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. இவ்விதமாய் தகப்பன் மடியின்மேலேறவேண்டுமென்றுவந்த சக்களத்தி மகனான துருவனை சுருசி பார்த்து, "பாலகனே! நீயேன்விருதாவாக இப் பிரயத்தனஞ்செய்கிறாய்? இந்தமனோரதமுனக்கு துர்லபமாயிருக்கும்; என் வயிற்றிலேபிறவாமல் வேறொருத்திவயிற்றிற்பிறந்த நீ இந்த உத்தமோத்தம மான சிங்காதனத்திலே யிருக்கநினைக்கிறது அவிவேகமேயாம். நீ இந்த மகீபாலனுக்கு மகனானாலும் சகலராஜ்ய லக்ஷ்மீநிவாசமான சிங்காதனத் துக்கு நீ தகுந்தவனாகமாட்டாய்; என்மகனே அதற்கு யோக்கியமானவன்; என்குமாரனுக்கிருக்கிறதுபோல் உனக்கும் இப்படிப்பட்ட மேன்மையான மனோரதம் இருக்கத்தகாது; பிள்ளாய்! நீ பாக்கியஹீனையான சுநீதிகர்ப்

பத்திலே பிறந்ததை நினைத்துக்கொள்ளவேண்டாமா" என்று இழிவாகச் சொன்னதைப்பொறுமல், கோபத்தினாற் கலங்கின மனமுடையவனாய் சரேலென்று தன்தாயார் வீட்டுக்குப்போய்விட்டான்.

அந்தச்சுநீதி கோபத்தினாற் கண்சிவந்து உதடுதுடிக்கவந்த தன்மகனை மடியிலுட்காரவைத்துக்கொண்டு, குழந்தாய் உன்கோபத்துக்குக் காரண மென்ன? உனக்கு இப்படி அபராதஞ்செய்து மகீமண்டலேசுவரனான வுன் தகப்பனை யவமானஞ்செய்தவர்யார்? என்று கேட்டதற்கு, துருவன் ஸபத்னிமாதாவான சுருசி கர்வத்துடன் இராஜாவின்சமீபத்திலே தன்னைச் சொன்னவார்த்தைகளையெல்லாம் தாயாருடனே சொன்னான். அதைக்கேட்டவுடனே சுநீதியானவள் பெருமூச்சுவிட்டுக் கண்ணொளியற்று மெலிந்தவளாய்ச் சொல்லுகிறாள்:—

"அப்பா! சுருசிசொன்ன வார்த்தைகளெல்லாம் நிஜந்தான். நீ சொற்பமானபாக்கியமுள்ளவன்; ஏனென்றால் மகா புண்ணியமுள்ளவர்களுடைய குழந்தை சத்துருக்களால் இப்படிச்சொல்லப்படுமோ? இத்தனையு முன்னுடைய பூர்வஜனனகர்மபரிபாகமாக நினைத்து மனதிலேகிலேசத்தைவிட்டுவிடு. உன்னுடைய பூர்வஜன்ம சுகிர்தபலத்தையபகரிக்க யாராலேயாகும்? நீசெய்யாதகர்மபலத்தைக் கொடுக்கத்தான்யாராலாகும்? பாக்கியவான்களான புருஷர்களுக்கேயல்லாமல் மற்றவருக்கு மகாராஜயோக்கியமான சிங்காசனமுஞ் சுவேதச்சத்திரமும் கஜதுரகாதி வாகனங்களு முண்டாகுமா? சுருசியானவள் பாக்கியவசத்தினாலே புருஷன் தன்னிடத்தில் மிகவும் பிரியமுள்ளவனாயிருக்கப்பெற்று பரிபூர்ணமனோரதையாய் சுகமாயிருக்கிறாள், என்னைப்போலே பாக்கியஹீனையாயிருக்கிறவள் பாரியையென்கிற பெயர்மாத்திரமுடையவளாய் துக்கித்திருக்கிறாள். உத்தமன் புண்ணியவானானபடியினாலே சுருசிக்கு மகனாகப்பிறந்தான், சொற்பபாக்கியவானான நீ என் கர்ப்பத்திலே ஜனித்தாய் குழந்தாய்! என்னசெய்யலாம் எவனுக் கெந்தமட்டும் அதிர்ஷ்டமோ அவன் அந்தமட்டிலே சந்தோஷிக்கவேண்டும்; இதுதான் புத்திமானுடையகாரியம்; ஆனபடியினாலே ஐசுவரியத்தைநினைத்து துக்கிக்கவேண்டாம்; ஆனால் சுருசிசொன்ன வசனங்களுக்கு நீ மனம்பொறாவிட்டால் உனக்குமப்படிப்பட்டமேன்மையுண்டாகும்படி சகலப்பிரதமானபுண்ணியத்தைச்செய்ய எத்தனப்படு; தர்மாத்துமாவாய் நல்லநடக்கையிலிருந்துகொண்டு சர்வபூத தயாபரனும் சர்வஜனமித்திரனுமாகச் சுகிர்தங்களைச் செய்தால் தண்ணீர் பள்ளத்திலெப்படிபோய்ச் சேருமோ அப்படியே சம்பத்துக்களும் அவனிடத்தில் தாமேவந்துசேரும்" என்று தாய்சொல்லக் கேட்டு, துருவன், தாயாரைப்பார்த்து "தாயே! நீ சொன்னவார்த்தைகள் சுருசிசொன்ன துர்ப்பாஷணத்தாலே பிளந்திருக்கிற என்னிருதயத்திலே பதியவில்லை, ஐசுவரிய கெர்விதையான அவளாலே நிராகரிக்கப்பட்ட நான் சர்வோத்தமமான ஸ்தானத்தைச்சம்பாதிக்கிறதற்கு எத்தனஞ்செய்கிறேன் பார்; மகிபாலனுக்கு அத்தியந்தப்பிரியையான சுருசியினுடைய கெர்ப்பத்திலே பிறவாமல் உன்னுதரத்திலே பிறந்தவனானாலும் என்னுடைய திரா

ளையைப்பார்; என்னுடைய பிராதாவான வுத்தமன் சுருசிக்குக் குமாரனா
னபடியினாலே தகப்பன்கொடுத்தராச்சியத்தை அனுபவிக்கட்டும், நான் என்
சக்தியினாலே சம்பாதிக்கப்பட்ட விபவமல்லாமல் ஒருவர்கொடுத்தவிபவத்
தைக் கைக்கொள்ளேன்; என் தகப்பனுக்குந் துர்லபமான திவ்யஸ்தானத்
தைத்தவத்தினாலே சம்பாதிக்கிறேன்" என்றுசொல்லித் தாயாருடைய அனு
மதிபெற்றுக்கொண்டு அதிசீக்கிரமாகப் பட்டணத்தைவிட்டு சமீபத்திலேயு
ள்ள ஒரு உபவனத்திலேசென்று, அங்கே கிருஷ்ணாஜினங்களையே ஆசனமாக
விரித்துப்போட்டு உட்கார்ந்துகொண்டிருந்த எழு ரிஷிகளைக்கண்டு அந்த
ராசபுத்திரன் அவர்களுக்குத் தெண்டன்சமர்ப்பித்து விநயத்தினால் உடம்பு
வணங்கி "முனீந்திரர்களே! நான் உத்தானபாதனுக்கு சுநீதிவயிற்றிலே
பிறந்த குமாரன், துருவனென்கிற நாமதேயமுடையவன், மிகுந்தமனக்கி
லேசத்தினாலே தேவரீர்கள் சந்நிதிக்கு வந்தேன்" என்று சொல்ல, அந்த
மகாமுனிகள் அவனைப்பார்த்து "ராசகுமாரனே! நீ நாலைந்துவயதுள்ளவனா
யிருக்கிறாய், இவ்வளவு சிறுவனான உனக்கு மனதில் துக்கமுண்டான கார
ணமென்ன? உன்பிதா வாழ்ந்துகொண்டிருக்கையாலே உனக்குக் குடும்ப
ரக்ஷண பாரமில்லையே! உனக்கு இஷ்டமான அர்த்தமேதாகிலு முனக்குக்
கைகூடாம லிருக்கமாட்டாதே! இஷ்டபந்துஜன வியோகமுண்டானதாக
வும் தோன்றவில்லை. இப்படி யிருக்க மனவெறுப்புக்குக் காரணமென்ன
சொல்லப்பா" என்று கேட்டார்கள். துருவன் அந்த மகாமுனிகளைப்பார்த்து
எனக்குச் சக்களத்தித் தாய் சொன்னவார்த்தையாலேவெறுப்புண்டாயிற்று.
அவ்வவமானத்தைப்பொறுக்கமாட்டாமையால் வந்தேனென்று சொல்லக்
கேட்டு அந்த முனிவர்கள் ஒருவரோடொருவர் 'இந்தப்பாலகன் சக்களத்தித்
தாய்பேச்சைப் பொறுக்கமாட்டாமல் கோபபரவசனாகப் புறப்பட்டு வந்தா
னன்றோ, உக்கிரமான க்ஷத்திரியதேஜசைப் பார்த்தீர்களோ, இவ்வளவுபை
யனும் அவமானம் பொறுக்கவில்லையே' என்று பேசிக்கொண்டு துருவனைப்
பார்த்து ராசகுமாரனே! நீ மனஸ்தாபத்தினாலே நொந்து என்னசெய்யவே
ண்டுமென்று நினைத்திருக்கிறாய்? அதற்காக எங்களாலே உனக்குவேண்டிய
சகாயமென்ன? சொல்; என்று கேட்க, துருவன் அவர்களைப்பார்த்து முனீந்
திரர்களே அடியேன்ராச்சியத்தையாவது மற்றுமுண்டான அர்த்தங்களையா
வது அபேட்சிக்கிறேனில்லை; ஆனால் பூர்வத்திலே யொருவனாலேயு மனுப
விக்கப்படாததாய் அபூர்வமாய்சகலஸ்தானங்களுக்கும் உன்னதமாயுமிருக்கிற
ஸ்தானத்தை வேண்டுகிறேன்; இந்தமனோரதம் நிறைவேறும்படியான உபா
யத்தை அடியேனுக்கு அனுக்கிரகிக்கவேண்டும் என்று சொன்னான்.—அத
ற்கு மரீசிமகாமுனிவர் ஓராசகுமாரனே! ஸ்ரீகோவிந்தனுடைய சரணா
விந்தங்களை யடைந்து ஆராதியாதவர்களுக்கு சர்வோத்தமமான ஸ்தானங்
கிடைக்கமாட்டாது. ஆனபடியினாலே நீ பக்தபராதீனனான அச்சுதனை யா
ராதனஞ் செய்யென்று அருளிச்செய்தார்.—பின்பு அத்திரிமகாரிஷி அந்த
ராசகுமாரனைப்பார்த்து, லோகேசுவரரான பிரமாதிகளுக்கும் அதீசுவரனான
ஜனார்த்தனன் எவனைக் கடாக்ஷிப்பனோ அவனே அக்ஷயமான திவ்யஸ்தா

னத்துக்கு உடையவனுவன், என் வசனத்தைச் சத்தியமாக நினை என்ருர்.—அப்பால் ஆங்கிரசர் சராசராத்மகமான சகலப்பிரபஞ்சமும் எவனுடைய குக்ஷியிலிருக்கிறதோ அந்தக்கோவிந்தனுடைய சரணகமலங்களை அர்ச்சனை பண்ணு, சர்வவுன்னதமான ஸ்தானத்தைப்பெறுவாய். என்று அருளினர். அப்பால் புலகமகாரிஷி எவன் பரப்பிரம்மமும் பரமபிராப்பியமும் சர்வவியாபகனுமாக இருக்கிருனே அந்த ஸ்ரீஹரியையாராதனஞ்செய்கிறதினுலே அத்தியந்தம் துர்லபமானமோக்ஷத்தையுமடையலாமென்ருல் இதரஸ்தானங்களை யடைகிறதற்குச் சந்தேகமென்ன என்று சொல்லியருளினர்.—அப்புறம் கிரதுமகாரிஷி எவன் யஜ்ஞங்களாலே ஆராதிக்கப்படும் புருஷனுகவும் யஜ்ஞசொரூபியாகவும் யஜ்ஞங்களுக்கு அதிபதியாகவும் இருக்கிற பரமபுருஷனே அந்தச் சனர்த்தனன் திருவுள்ளம்பற்றினுனல் அடையக் கூடாதஸ்தானமுமுண்டோவென்று சாதித்தார்.—பின்பு புலஸ்தியமகாரிஷி பூர்வத்திலே இந்திரன் செகத்பதியான எவனையாராதித்துச் சர்வோன்னதமான இந்திரபதத்தையடைந்தானே அப்படிப்பட்ட யஜ்ஞேசுவரனுன ஸ்ரீவிஷ்ணுவையாராதனம்பண்ணு என்று சாதித்தருளினர்.—அப்பால் வசிஷ்டர் குழந்தாய்! ஸ்ரீவிஷ்ணுபகவானை ஆராதனஞ்செய்தையாகில் இதுவரையிலும் இல்லாத நூதனமான ஸ்தானமொன்றை நீ மனசிலே நினைத்தாலும் அப்படிப்பட்டதையும் சித்தமாய் அடைவாய்; அப்படியிருக்க உண்டாயிருக்கிற மூன்றுலோகத்துக்கு முட்பட்ட மேலான ஸ்தானமடையச் சந்தேகமென்ன என்று அருளிச்செய்தார்.

இவைகளைக்கேட்டுத் துருவன் அந்தமகாமுனிகளைப்பார்த்து முனீந்திரர்களே தேவரீர்கள் ஆராதிக்கவேண்டியவனை அடியேனுக்குத்தெரியும்படி அருளிச்செய்தீர்கள்; அவ்வெம்பெருமான் திருவுள்ளமுவந்து கிருபைசெய்யும்படி ஜபிக்கவேண்டிய மந்திரத்தையும் ஆராதனஞ்செய்யவேண்டியவிதத்தையும் அடியேனுக்குப் பிரசாதிக்கவேண்டுமென்று கேட்டதற்கு, அந்த மகரிஷிகள் துருவனைப்பார்த்து ராஜபுத்திரனே! ஸ்ரீ விஷ்ணுவினிடத்தில் பக்திசெய்யவேண்டுமென்கிறமனிதன் முன்னதாக பாஹ்யவிஷய வபிலாஷைகளை வர்ஜித்து மனதை நிர்மலமாக்கிப் பின்பு அம்மனதை முகுந்தனுடைய சரணுரவிந்தங்களிலே நிச்சலமாகச்சேர்த்து வேறுநினைவில்லாமல் அத்திருவடிகளையே பாவித்துக்கொண்டு பரிசுத்தனுய் வியஷ்டி ஸமஷ்டிரூபமாகப் பிரகிருதியும் புருஷனும்சரீரமாகவுடைய சுத்தஞானமயனுன வாசுதேவனுக்குத் தெண்டன்சமர்ப்பிக்கின்றேன்*என்கிற பொருளையுடைத்தான மகாமந்திரத்தைச் செபிக்கவேண்டும். உன்னுடைய பிதாமகனுன சுவாயம்புமனுவானவர் இந்தமகா மந்திரத்தினுலே ஜனர்த்தனனையுபாசனைசெய்ததனுலே அவர் திருவுள்ளமுவந்து அந்த மனுவுக்கு அவர்விரும்பியபடி திரி

---

*இங்கே ஸ்ரீமத்துவாதசாக்ஷர மஹாமந்திரம் உபதேசிக்கப்பட்டது. அது தகுந்த சிஷ்யனுக்கு ஏகாந்தத்தில் உபதேசிக்கவேண்டியதானதால் அதைமகரிஷி நேராயருளிச்செய்திலர்; இது லிங்கபுராணத்தினுல் விளங்கும்.

லோகதுர்லபமான ஐசுவரியத்தைப் பிரசாதித்தருளினர். நீயுமப்படியே இந்த மகாமந்திரத்தைச்செபித்து ஸ்ரீயப்பதியை ஆராதனஞ் செய்யக்கடவையென்று நியமித்தருளினார்கள்.

இப்படி ஸப்த்தமகாரிஷிக ளுபதேசஞ் செய்யப்பெற்று துருவன் சந்துஷ்டியுடையவனுகி அவர்களுக்குத் தெண்டன் சமர்ப்பித்துக் கிருதார்த்தனனேனென்று நினைத்துக்கொண்டு அந்தவனத்தைவிட்டுப் புறப்பட்டு மதுவென்கிறபெயரையுடைய அசுரனுக்கு வாசஸ்தானமாயிருந்ததனலே மதுவனமென்று பேர்பெற்றதாய் பின்பு ஸ்ரீசத்துருக்னுழ்வான் அந்தமதுவின்புத்திரனன லவணுசுரனைச் சங்கரித்து மதுரையென்கிறபுரத்தைச் செய்தருளப்பெற்றதாய், தேவதேவனுகியும் சகலபாபங்களையும் போக்கும்படியான சக்தியுள்ளவனுகியுமிருக்கிற எம்பெருமானுடைய சான்னியத்தியமுள்ளதாய், யமுனுதிதீரத்திலே விளங்குகின்ற மதுவனத்துக்குவந்து சகலபாபக்ஷயகரமான அந்தப் புண்ணிய க்ஷேத்திரத்திலே மரீசிமுதலான மகாரிஷிகள் உபதேசித்தகிரமமாக சகலதேவதைகளுக்கும் நாதனன ஸ்ரீவிஷ்ணுவைத் தன் ஹ்ருதய கமலத்திலே தியானித்துக்கொண்டிருந்தான்.

இப்படி ஒருநினைவாய் தியானஞ்செய்துகொண்டிருந்த அந்தத் துருவனுடைய சித்தத்திலே ஸ்ரீஹரிபகவான் அதிப்பிரகாசமாகத் தோன்றியருளினர். அதைக்கண்டு அந்த மனுவந்தரத்திலேயிருந்த யாமரென்னுந் தேவதைகள் சித்தங்கலங்கி இந்திரனுடனே ஆலோசனைசெய்து துருவனுடைய தியானத்திற்கு விக்கினஞ்செய்யவேண்டுமென்று எத்தனஞ்செய்தார்கள்.

அப்போது தேவேந்திரனுடைய உத்தரவினலே விருபங்களும் பயங்கரங்களுமான கூசுமாண்டங்களென்கிற பூதவிசேஷங்கள் அந்தமகாயோகிசெய்கிற தியானத்தைக்கலைக்கும்படி வந்து சூழ்ந்து சிலமாயங்கள்செய்தன. அவ்விதஞ் சொல்லுகிறேன்கேளும்: துருவனுக்குத் தாயான சுநீதியின் சொருபத்தைத்தரித்து ஒருமாயை துருவனுக்குஎதிரில் அப்பாமகனேயென்று இரக்கமான தொனியோடு கூவிக்கொண்டுவந்துநின்று, குமாரனே! சரீரம் அபாயமடைவதற்குக் காரணமாகையாலே கொடியதான இந்தத் தவத்தைநிறுத்து, அப்பாமகனே! அனேககாலந் தவஞ்செய்து உன்னைப்பெற்றேனே! என் மனோரதங்களைத் தவிர்த்து அனுதையும் பேதையுமான என்னைத் தனியே அலையவிட்டுச் சக்களத்தித்தாய் சொன்னபேச்சினலே நீயிப்படிவருகிறது நியாயமோ? குழந்தாய் கதியில்லாத எனக்கு நீயன்றோ கதி, அஞ்சுவயதுள்ள பாலகனன நீயெங்கே! மிகவுங் கடினமான இத்தவமெங்கே! நிஷ்பலமான இந்தப்பிரயாசத்திலிருந்து மனதைத்திருப்பு, அப்பனே! இது உனக்கு விளையாடுகிறகாலமாயிற்றே! அப்புறம் வேதசாஸ்திரங்களை அத்தியயனஞ் செய்யுங்காலம்; அப்புறம் போகானுபவங்களுக்குக் காலம்; அதற்குப்பிறகே தவஞ்செய்வதற்குக்காலம்; ஆனதனல் புத்திரனே விளையாடுகிறபிராயத்திலே ஆத்துமக்கிலேசமான தவஞ்செய்கிறது யுக்தமன்று, எனக்குச் சந்தோஷஞ்செய்வதன்றோ உனக்குத் தருமம், தாயான என்வார்த்தைகளைக்கேட்டு இந்தப் பிராயத்துக்குத் தகுந்தபடி என்னுடனே கூடவரவேண்டியது உனக்கு

நியாயம்; இப்படிசெய்யாமல் புத்திமோகத்தினாலே இவ்வதர்மத்தைச்செய்
கிறாய்; இனியாகிலும் விட்டுவிடு; என்னருமையானகுழந்தாய் நீகடின இரு
தயனாகி யென்வசனத்தைக் கேளாமலிருக்கிறாய்; இனி இந்தத் தவத்தை
விடாமற்போனையேயானால் இதோபார் உன்னெதிரிலேயே என்பிராணனை
விட்டுவிடுகிறேன்என்று தாரைதாரையாகக் கண்ணீர்பெருகக் கதறியழுது
கொண்டு நிற்கக்கண்டும் துருவன் நாராயண சரணாரவிந்தங்களிலே சித்தத்தை
வைத்திருப்பதனாலே காணாதவனாகவே யிருந்தான். பின்பு அந்தமாயாசுநீதி
யும் துருவனைப்பார்த்து குழந்தாய்! கோராகாரர்களான ராக்ஷஸர்கள் கதா
கட்காதி ஆயுதங்களை யெடுத்துக்கொண்டு இதோ வுன்னைச் சங்கரிக்கவரு
கிறார்கள், இப்போதாகிலும் தவம்விட்டோடிவாவென்றுசொல்லி மறைந்து
போனாள். அப்பால் நாநாவித ஆயுதங்களோடு அக்கினிச்சுவாலாகுலமான
முகங்களுடையவர்களாய் அனேக ராக்ஷஸர்கள்வந்து தோன்றினார்கள்.
அவர்கள் அச்சிறுவனுக்கெதிரில் வந்து அதிதீக்ஷணங்களான கதாகட்கசூலங்
கள்முதலான ஆயுதங்களைக் கைகளிலேந்திப் பளபளவென்று மின்னும்படி
திருப்பிக்கொண்டு பயங்கரமாகக் கர்ச்சனைசெய்தார்கள்; அன்றியும் குபுகுபு
வென்றுஅனலெழும்புகிற முகங்களுடன் கூடினநரிகள் அந்தப்பாலகனை நாற்
புறமுஞ்சுற்றிவந்து அதிகோரமாகக் கூவிக்கொண்டிருந்தன; சிங்கமுகங்
களும்முதலைமுகங்களும் ஒட்டகமுகங்களுமுள்ள நிசாசரர்கள், இந்தப்பைய
னைச்சங்கரியுங்கள் குத்துங்கள் வெட்டுங்கள்பட்சியுங்களென்று ஒருவர்க்கொரு
வர் சொல்வதுபோல் குரூரவசனங்களினாலே அதட்டிக்கொண்டு பெருங்கூச்ச
லிட்டுப் பயப்படுத்தினார்கள்; அவன்கோவிந்தனுடைய சரணாரவிந்தங்களிலே
லயமான இருதயமுடையவனானதனாலே அந்தராக்ஷஸர்களும் அவர்களுடைய
ஆயுதங்களும் அந்தநரிகளும் பயங்கரமான சத்தங்களும் அந்தப்பாலனுக்கு
ஒன்றுஞ்செய்யமாட்டாமற்போயின. அவன்இவைகளைக்கவனியாமல் ஸ்திர
சித்தத்துடனே ஸ்ரீமந்நாராயணனைத் தனக்குள்ளே எழுந்தருளியிருக்கிறவ
னாகத் தியானித்துக்கொண்டு மற்றொன்றுமறியாமலிருந்தான்.

இப்படிப் பிரயோகித்த அந்தமாயைகளெல்லாம் உபயோகப்படாமல் நாச
மடைந்துபோகவே தேவதைகள் அந்தமகாத்துமாவினுடைய தபோமகத்
துவத்தினாலே தங்களுக்கு என்னஅபாயம்நேரிடுமோவென்று மெத்தவருந்
திச் சித்தங்கலங்கி அத்தவத்தை நிறுத்த வுபாயஞ்செய்யவேண்டுமென்று
அநாதிநிதனனாய் ஜகத்காரணபூதனாய் சரண்ணியனுமாயிருக்கிற ஸ்ரீமந்நா
ராயணனைச் சரண மடைந்து, "தேவதேவனே! ஜகந்நாதனே! புருஷோத்
தமனே! துருவனுடையதவத்தின் பிரபாவத்தினாலே நாங்கள்தபிக்கப்பட்டவர்
களாய் உன்சன்னிதியில் சரணாகதிபண்ணினோம்; சந்திரன் தினந்தினமுங்
கலைகளினாலே அபிவிர்த்தியடைவதுபோலே உத்தானபாதனுடைய குமா
ரன் தபோவிசேஷத்தினாலே அபிவிர்த்தியாகிவருகிறான்; அதனாலே அடி
யேங்கள்பயப்படுகிறோம்; அந்தப்பாலகன் இந்திரவருணகுபேரசூரிய சந்தி
ராதிகளுடைய அதிகாரத்திலே யெதைக்கேட்பானோ அறியோம்; ஆனத
னாலே அவனுடையதவத்தை நிறுத்தி அடியேங்களுடைய விசாரத்தைத்

தீர்த்தருளவேண்டும்" என்று பிரார்த்திக்க, கமலாக்ஷன் அமரர்களைக் கடாக்ஷித்து, துருவனானவன் இந்திர வருண சூரிய சந்திராதிகளுடைய அதிகாரங்களிலே யொன்றையும் அபேக்ஷிக்கவில்லை; அவனுடைய மனோரதத்தை நானறிவேன், நீங்கள் கிலேசத்தைவிட்டு உங்களுடைய வாசஸ்தானங்களுக்குப் போய்ச்சேருங்கள், நான் அவனுக்கு இஷ்டமானவரத்தைக்கொடுத்துத் தவத்தைநிறுத்துகிறேன்என்று அருளிச்செய்தார். பிறகு இந்திராதிதேவதைகள் தெண்டன் சமர்ப்பித்துச் சொஸ்தசித்தர்களாய்த் தங்களுடைய வாசஸ்தானத்துக்குப் போய்ச்சேர்ந்தார்கள்.

பின்பு சர்வாத்மகனான எம்பெருமான் துருவனுடைய ஒரேசித்தமான தியானத்திற்குத் திருவுள்ளமுவந்து நான்கு திருத்தோளுள்ள திருமேனியோடு துருவனுக்குப் பிரத்தியக்ஷமாகி, 'ஓ உத்தானபாத புத்திரா! உனக்குச் சுபமுண்டாகக்கடவது. உன்தவத்துக்குச் சந்தோஷித்து அபீஷ்டமானவரங்கொடுத்தற்காக இதோ வந்தேன்; நீ பாஹ்ய விஷயங்களைப் பரித்யஜித்துச் சித்தத்தையென்னிடத்திலே நிலையாகநிறுத்தினதனாலே சந்தோஷமடைந்தேன்; இஷ்டமானவரத்தைக் கேள்' என்று அருளிச்செய்யக்கேட்டு, அந்தப் பாலகன் தன்கண்களைத்திறந்து தான்தியானஞ்செய்தவிதமாகவே எதிரில் சங்குசக்கிர கதாகட்க சார்ங்கங்களாகிய பஞ்சாயுதங்களுடனேயும் கிரீட வனமாலிகா கவுஸ்துப பீதாம்பராதிகளுடனேயும் எழுந்தருளிச் சேவைசாதித்த ஸ்ரீயப்பதியைக் கண்டு திடீரென்று சாஷ்டாங்கமாய்ப் பூமியில் விழுந்து தெண்டன் சமர்ப்பித்துப் புளகாங்கிதகாத்திரனாய் பயபக்திகளுடனே தேவதேவனான ஸ்ரீமந்நாராயணனைத் துதிசெய்யநினைத்து, இந்தமகாபுருஷனைக்குறித்து எந்த வாக்கியஞ்சொல்வேன் ஆர்சொன்னபடி துதிப்பேன் என்று மனங்கலங்கிஒன்றுந்தோன்றாமல் அவ்வெம்பெருமானையேசரணமடைந்து, ஸ்வாமீ! ஷட்குண அயிசுவரியசம்பன்னனே! அடியேன்தவத்துக்குத் திருவுள்ளமுவந்ததனால் தேவரீரை ஸ்தோத்திரஞ்செய்ய நினைக்கிற அடியேனுக்கு அதற்கேற்றஞானத்தைப் பிரசாதித்தருளவேண்டும். தேவதேவனே! வேதாந்தவேதிகளான பிரமாதிகளும் உம்முடைய பிரபாவத்தைவர்ணிக்கமாட்டார்கள், அப்படிப்பட்டவும்மைப் பாலகனான அடியேன் எந்தவிதமாகத்துதிப்பேன். பரமேசுவரனே! அடியேன்மனசு தேவரீர்சரணகமலங்களிலே பத்தியுத்தமாய் தேவரீரைத்துதிக்கவேண்டுமென்கிற விருப்பமுடையதாயிருக்கிறது, ஆகையால் அடியேனுக்கு அதற்கேற்ற ஞானவிசேஷத்தைப் பிரசாதிக்க வேண்டும் என்று பிரார்த்திக்க, ஸ்ரீகோவிந்தன் சகலவித்யாமயமான தன்னுடைய திவ்யசங்கத்தினாலே அஞ்சலிபண்ணிநின்றுகொண்டிருக்கிற அந்தப்பாலகனை முகத்திலே பரிசித்தருளினார்.

பின்பு அந்தராசகுமாரன் ஞானோதயமானதனாலே பிரசன்னமான முகத்துடனே தெண்டன்சமர்ப்பித்து அந்தக்ஷணத்திலே சர்வபூதேசுவரனான அச்சுதனைத் தோத்திரஞ்செய்யத்தொடங்கினான். எப்படியென்றால்: "பிரிதிவி அப்பு தேஜசு வாயு ஆகாசங்களும், தன்மாத்திரைகளும், மனசும், மற்றுமுள்ள இந்திரியங்களும், மகதகங்காரங்களும், மூலப்பிரகிருதியும், எவனு

டையரூபங்களோ அந்தச்சருவேசுரனுக்குத் தெண்டன் சமர்ப்பிக்கிறேன்; சுபாவத்தில் சுத்தனுய் சூட்சுமரூபியாய் ஞானத்திலே எங்கும்வியாபித்தவனுய் பிரகிருதிக்கும் பரனுயிருக்கிற புருஷனும் எவனுடைய ரூபமா யிருக்குமோ அந்தக்குணகரனுன புருஷோத்தமனுக்குத் தெண்டன்சமர்ப்பிக்கிறேன்; பிருதிவி முதலான பூதங்களும் கந்தாதிகுணங்களும் புத்தியாதிகளும் பிரகிருதியும் சம்சாரியான ஜீவனும் ஆகிய இவர்களைக் காட்டிலும் பரனுன மூத்தபுருஷன் எவனுடைய ரூபமாயிருக்குமோ அப்படிப்பட்ட ஜகத்பதியானவனுக்குத் தெண்டன்சமர்ப்பிக்கிறேன்; பரமேசுவரனே! பிரமலக்ஷணமுள்ளதாய் சகலலோகத்துக்கும் அதிபதியாய் சுத்தமாயுமிருக்கிற உமதுசொரூபத்துக்கு வந்தனஞ்செய்கிறேன்; சர்வாத்மகனே சமஸ்தசத்திகளும் அமைந்திருக்கையாகிற பிருகத்துவத்தினுலேயும், ஜகதாகாரத்தினுலேயும் மகாப்பிரமாணமாக இருப்பதனுலேயும் பிரமமென்கிற நாமதேயமுடையதாய் விகாரமில்லாததாய் யோகிசிந்தியமாய் விளங்குகிற உமது சொரூபத்துக்கு வந்தனஞ்செய்கிறேன்; நீர் * ஸஹஸ்ரசிரசுகளும் ஸஹஸ்ரபாதங்களும் ஸஹஸ்ரநேத்திரங்களும் உடையவனுய் புருஷனுமாய் சர்வத்தையும்வியாபித்து பூமி

---

* ஸஹஸ்ரம் என்பது இங்கே ஆயிரமன்று, அளவில்லாதது என்னும் பொருளைத்தரும்; சிரம் என்பது சகல அங்கங்களுக்கும் உபாங்கங்களுக்கும் உபலக்ஷணமாம்; ஆகவே அளவற்ற சிரசுமுதலானசகல அங்கங்களையுமுடையவன் என்பது பொருளாம்: அதனுல் அபரிமிதமாய் அற்புதமாயிருக்கிற மகாஞானமும் மகாசத்தியு முள்ளவன் எம்பெருமான் என்பது கருத்து. இதையே ஸஹஸ்ரபாதன் ஸஹஸ்ரநேத்திரன் என்பவை விளக்குகின்றன; எப்படியெனில் பாதம் என்பது கர்மேந்திரிய மெல்லாவற்றையும், நேத்திரம் என்பது ஞானேந்திரிய மெல்லாவற்றையும் காட்டுகின்றதினு லெனவறிக; ஆக முக்கியமானகருத்து என்னவெனில், இவ்வெம்பெருமான் சகல இந்திரியங்களாலேயாதல் ஒரிந்திரியத்தினுலேயாதல் ஒருவிஷயத்திற்குரிய இந்திரியத்தை மற்ருென்றிற்கு மாற்றியதால் திருமேனியாலேயாதல் திவ்யாத்தும ஸ்வரூபத்தினுலேயாதல் எல்லாவற்றையும் எப்போதும் எல்லாவிதத்திலும் நேராகஅறிகிறவனும் செய்பவனுமாயிருக்கிருனென்கிறதேயாம். இப்படியேயல்லது, முள்ளம்பன்றி தேகமுழுவதிலும் முள்ளுகளாலே செறிந்திருப்பதுபோல் அனேகந்திருமுடிகள் திருக்கண்கள் திருக்கைகள் திருவடிகள் முதலான அவயவங்களால் செறிந்து கோரரூபமுள்ளவனுயிருக்கிருன் பகவான் என்பது கருத்தன்று. அளவில்லாத கண்முதலியவைகளையுடையவன் எப்படி அளவில்லாத காட்சி முதலானவற்றை யுடையவனுயிருப்பானே அப்படியே பகவானும் என்று ஒரு திஷ்டாந்தம் காட்டினபடியாம் என்று பெரியோர் அருளிச்செய்தார். இங்கு சிலர் உலகமெல்லாம் பகவானுடையசொரூபமாதலாலே உலகத்திலுள்ளோருடைய சிரம்கண்முதலானவையெல்லாம் அவனுடையவையாம் எனக்கருத்துக்கூறுவர்; அது பலவிதத்திலும் பொருந்ாதெனவறிக.

யென்று சொல்லப்பட்ட சராசரமயமான பிரபஞ்சத்தைக் காட்டிலும் பதின்
மடங்கதிகமாகமேற்பட்டிருக்கிறீர். பூதபவிஷ்யத்வஸ்துசாதங்கள் நீரோ; புரு
ஷோத்தமனே விராட்டு என்றுசொல்லப்பட்ட அவியத்தசரீரனான அனி
ருத்தனும் ஸ்வராட்டுஎன்றுசொல்லப்பட்ட கேவலாத்ம பிராப்தியுள்ளவனும்
சம்ராட்டு என்றுசொல்லப்பட்ட பரமபதத்தையடைந்தவனும் ஆதிபுருஷன்
என்று சொல்லப்பட்டபிரமதேவனும் உம்மிடத்திலே யுண்டானார்கள்; சமஷ்
டிதேகனானஇரணியகர்ப்பனென்கிறஅந்தப்புருஷன் பிரிதிவிக்கு அதோபாகத்
திலும்பாரிசதேசத்திலும் ஊர்த்துவதேசத்திலும் வியாபித்திருக்கிறான்; உம்மி
டத்திலே பிரபஞ்சமெல்லாமுண்டாயிற்று; உம்மிடத்திலேயே உண்டாகவும்
போகிறது; இப்படி உம்மிலே சிருட்டிக்கப்பட்டு உம்முடைய ரூபமாயிருக்கிற
இரணியகர்ப்பனுதரத்திலே அகிலப்பிரபஞ்சமும் அடங்கி யிருக்கிறதனால் எல்
லாம் உமக்குள்ளேயென்று வேறாகச் சொல்லவேண்டுமோ? எல்லாம் ஓமஞ்
செய்யப்பெற்றயாகமும் பிரஷதாச்சியம் என்கிற அவிசும் கிராமியங்களென்
றும் ஆரணியங்களென்று மிரண்டுவிதமான பசுக்களும் ருக்கு யசுர் சாமங்க
ளும் சந்தங்களும் அசுவங்களும் அஜாதிகங்களும் ஒற்றைப்பல்வரிசையுள்ள
வையாகிய ஐந்துசாதங்களும் மிருகங்களும் உம்மிடத்தில் உண்டாயின;
உமதுவதனத்திலே பிராமணர்களும் புயங்களிலே க்ஷத்திரியர்களும் தொ
டைகளிலே வைசியர்களும் பாதத்திலே சூத்திரர்களும் கண்களிலேசூரிய
னும் மனதிலே சந்திரனும் பிராணத்திலே வாயுவும் முகத்திலே அக்கினி
யும் நாபியிலே அந்தரிட்சமும் சிரத்திலே சொர்க்கமும் கர்ணங்களிலே
திசையும் பாதங்களிலே பூமியுமுண்டாயின. அதிவிஸ்தீர்ணமான ஆலமரம்
அதிகசொல்பமான பீஜத்திலே யடங்கியிருந்தாற்போலே மகத்தான இந்தப்
பிரபஞ்சமெல்லாம் பிரளயகாலத்திலே ஆதிகாரணபூதனான வும்மிடத்திலே
யடங்கியிருந்தது, வடவிருட்சம் மறுபடியும் பீஜத்தினின்று முண்டாய்
சாகோப் சாகமாக விஸ்தாரமானாற்போலே சிருட்டிகாலத்திலே பிரபஞ்ச
மெல்லா மும்மிடத்திலிருந்து உண்டாய் விஸ்தீர்ண மாயிற்று. ஜகந்நாயக
னே, பட்டைக ளொன்றின்மேலொன்றாய் மூடப்பெற்று ஏகாகாரமாகத்
தோன்றுகிற இளம்வாழைக்கன்றே பெரிதாகி வேறாகாமலிருப்பதுபோலே
சூக்ஷ்ம சிதசித்துக்களோடு கூடிக் காரணரூபமான உம்மைக்காட்டிலும்
ஸ்தூலசிதசித்துக்களின் ரூபமாய்க் காரியமான இந்தப் பிரபஞ்சம் வேறா
காமலிருக்கிறது; சுத்தசந்தோஷகரமும் இடைவிடாது நிகழ்வதும் எப்போ
தும் ஒரேவிதமுமாகி யிருக்கிற ஞானவிசேஷம் உம்மிடத்திலேயே உண்டு;
இப்படியல்லாமல் சந்தோஷதுக்கங்களை யுண்டாக்குவதும் சுத்ததுக்கத்தை
யுண்டாக்குவதுமான ஞானங்கள உம்மிடத்திலில்லை; ஏனெனில் நீர் பிரா
கிருதங்களான சத்வாதிகுணங்களோடு கலப்பில்லாமல் அப்பிராகிருத சுத்த
சத்துவ மயனாயிருக்கிறீரன்றோ; பிரபஞ்சத்துக்கு வேறாய்நிற்கிற ஓரோயாத்து
மாவாய் சர்வபூதசரீரகனாய் விளங்குகிற உமக்குத் தெண்டன் சமர்ப்பிக்கி
றேன்; பிரபஞ்சத்திலே சிரேஷ்டரான பிரமாதிசுரூபியும் சர்வபூதாந்தர்யா
மியுமான வுமக்கு வந்தனஞ் செய்கிறேன்; சூக்ஷ்மபிரகிருதியும் ஸ்தூலப்

பிரகிருதியும் புருஷனும் விராட்டு ஸ்வராட்டு சர்மராட்டு என்கிறவர்களும் எல்லாம் நீரேயாகிறீரன்றோ; அன்றியும் யாவருடைய அந்தக்கரணங்களிலேயும் அக்ஷயமான ஞானமயனாகப் பிரகாசிக்கிறீர். நீர் *அததின்சாரமாய் சர்வத்திலேயுமிருக்கிறீர். உம்மிடத்திலே சர்வமுமிருக்கிறது; ஆதலால் சர்வாத்துமகனான உமக்குத் தெண்டனிடுகிறேன்; இப்படி நீர் எல்லாவற்றிற்கும் காரணமாய் எல்லாவற்றையும் வியாபித்து எல்லாவற்றினுள்ளுமிருக்கிறீ ரானபடியினாலே நீரே அடியேனுடைய மனோரதமுழுதும் அறிவீர், ஆதலால் அடியேன் விண்ணப்பஞ் செய்யவேண்டுவ தென்ன இருக்கிறது; சுவாமீ! உம்மைப் பிரத்தியக்ஷமாகச் சேவித்துத் தெண்டன் சமர்ப்பித்ததனாலே அடியேன் மனோரதங்களும் சபலமாயின; அடியேன் தபசும் பலமாயிற்று; அடியேன் கிருதார்த்தனானேன்," என்று இப்படி துதிசெய்து நின்ற துருவனைப்பார்த்து எம்பெருமான் அருளிச்செய்கிறார்.

ராஜகுமாரனே என்னைக்கண்டு சேவித்ததனாலே உன்தபசு பலமானதுசரிதான், ஆனால் நான் சேவைசாதித்தது வியர்த்தமாகக் கூடாதாகையாலே உனக்குவேண்டிய அபீஷ்டத்தைக்கேள், என்று பெருமாள் அருளினதைக்கேட்டுத் துருவன் விண்ணப்பஞ் செய்கிறான்: தேவதேவனே சர்வபூதாந்தர்யாமியானவுமக்கு அடியேனபீஷ்டந் தெரிந்தே யிருக்கிறது ஆனாலும் நியமித்தபடியினாலே விண்ணப்பஞ் செய்கிறேன்; மூடனான அடியேனுக்குத் துர்லபமான அர்த்தத்தைப் பிரார்த்திக்கிறேன். இந்திரன் உமதனுக்கிரகத்தினாலேயன்றோ திரிலோகராச்சியத்தை யனுபவித்துக்கொண்டிருக்கிறான், ஜனார்த்தனனே சுருசியானவள் தன் கருப்பத்திலேபிறவாதபடியினாலே நீ ராஜயோக்யமான சிங்காசனத்துக்கு அதிகாரியல்லையென்று அடியேனைப்பார்த்து வெகு இறுமாப்போடு சொன்னாளன்றோ, ஆனதனாலே ஜகத்துக்கு ஆதாரபூதமும் சர்வோத்தமமும் அவ்யயமு மான உன்னதஸ்தானம் பெறவேண்டுமென்று அபேக்ஷிக்கிறேன் அனுக்கிரகித்தருளவேண்டும் என்று கேட்டதற்கு ஸ்ரீபகவான் ராஜநந்தனனைக் கடாக்ஷித்து, பாலனே உனக்கபீஷ்டமான ஸ்தானத்தையடைவாய்; இதற்குக்காரணம்வேறுமுண்டு சொல்லுகிறேன்கேள். பூர்வஜன்மத்திலே நீ யென்னை யாராதித்து உகப்பித்தாய்; அதெப்படியென்றால், பூர்வஜன்மத்திலே நீ யொருபிராமணனாய்ப்பிறந்து மாதுர் பிதுர் சிசுருஷைகள் செய்துகொண்டு தர்மந்தப்பாதே ஏகாக்கிரசித்தனாய் என்னை யாராதித்துக்கொண்டிருந்தாய்; சிலநாள் சென்றபிறகு உனக்கு யவ்வனவயசுவந்தபோது சர்வாபரணபூஷிதனும்சகல போகசம்பன்னனும் மகாசுந்தர தேசமுடையவனுமான ஒருராஜகுமாரன் சினேகிதனானான்; அப்போது துர்லபமான அவனுடைய ஐசுவரியபோகங்களைக்கண்டு ஆசைப்பட்டு ராஜபுத்திரனாகப்பிறக்கவேண்டுமென்று இச்சித்தாய்; ஆனதனாலே உன் மனோரதத்துக்கு ஏற்றதாகத் துர்லபமான உத்

* அததின்சாரமாய் என்றால் எந்த வஸ்துவுக்கு எதனாலே விசேஷமோ அந்தவிசேஷமெல்லாம் பகவத்ஸ்வரூபமாம்; அது ஆகாசத்திற்குச் சப்தம், மனிதருக்குப் பவுருஷம், சூரியனுக்கு ஒளி இப்படியாகக் கண்டுகொள்வது.

தானபாதன்கிரகத்திலேபிறந்தாய்; என்னை யாராதியாத மற்றவர்களுக்கு ஜகத்பூசிதமான சுவாயம்புவமனுவமுசத்திலே ஜனனமுண்டாவது துர்லபம்; இப்போதும் நீ அத்தியந்த பக்தி விசேஷத்தினாலே நான் உவக்கும்படி செய்தாய்; என்னிடத்தில் சித்தத்தைச்சமர்ப்பித்து என்னை யாராதனஞ்செய்த மனிதன் அதிசீக்கிரத்தில் சர்வோத்தமமானமோக்ஷத்தையும் அடைவனானால் அற்பமான சொர்க்காதிபலன்களை யடைவது அதிசயமோ? நீயும் என்னுடைய அனுக்கிரகத்தினாலே மூன்று லோகங்களுக்கும் மேற்பட்டதாய் சகல தாராகிரக நக்ஷத்திரங்களுக்கும் ஆதாரபூதமாய் சூரிய சந்திர அங்காரக புத பிரகஸ்பதி சுக்கிர சனிகளுடையஸ்தானங்களுக்கும் நக்ஷத்திர மண்டலத்துக்கும் விமானாரூடராய்ச் சித்தாதிகள் சஞ்சரிக்கிற ஸ்தானங்களுக்கும் அதியுன்னதமாய் விளங்குகிற திவ்யஸ்தானத்தை யடைந்து சுகமாயிருப்பாய்; தேவதைகளிற்சிலர் சதுர்யுக பரியந்தமும் சிலர்மனுவந்தரபரியந்தமு மல்லாமல் அதிககாலம் இரார்கள்; நீயோ என்கிருபையினாலே கல்பகால் பரியந்தமும் அந்தச்சர்வோன்னத ஸ்தானத்திலே சுகமாக இருக்கக்கடவாய், உன்னுடைய தாயான சுநீதியும் திவ்யவிமானத்திலேறிக்கொண்டு நக்ஷத்திரரூபமாய்ப் பிரகாசித்துக்கொண்டு கல்பாந்த பரியந்தமும் உன்சமீபத்திலே யிருக்கக்கடவள்; எவனாகிலுஞ் சாயம்பிராதக்காலங்களிலே மனவுறுதி யுள்ளவனாயுன்னைக்கீர்த்தனம்பண்ணுவானாகில் அவன் மகாபுண்ணியத்தைப்பெறுவான் என்று சொல்லிவரந்தந்தருளினார்.

இவ்விதமாகத்தேவதேவனும் சகத்துக்கு நாதனுமான சனார்த்தனனுடையகிருபையினாலே இஷ்டமானவரம்பெற்றுத் துருவன் சர்வலோகோன்னதமான ஸ்தானத்தையடைந்தான், மாதா பிதாக்களுடைய சிசுருஷையினாலும் தவத்தின் பிரபாவத்தினாலும் ஸ்ரீமத்துவாதசாக்ஷர மகாமந்திரமாகாத்துமியத்தினாலும் மகாத்மாவான துருவனுக்கு உண்டான அபிமானமும் லோகோத்தரமான ஐசுவரியமும் மகிமையும்பார்த்து அசுரகுருவானசுக்கிராசாரியர் சந்தோஷமடைந்து, சப்த்தரிஷிகளும் எந்தமகாத்மாவை முன்னிட்டுக் கொண்டுசஞ்சரிக்கிறார்களோ அந்தத்துருவனுடைய மேன்மையான தவசின் பிரபாவத்தை என்னசொல்லுவேன், இவனுடைய தவத்தின்பயனை என்னசொல்லுவேன்; வெகு ஆச்சரியமாயிருக்கிறது; இந்தப்பிரபாவத்தைக் கொண்டாடயாராலேயாகும்; இதமும் சத்தியமுமான வாக்குள்ளதுருவன் தாயான சுனீதியின்மகத்துவத்தை வர்ணிக்கத்தக்ககவிகளும் உலகத்திலுண்டோ; அந்தப்பெண்ணரசு துருவனைக்கர்ப்பத்திலே தரித்ததினாலேசர்வோத்தமும் சாசுவதமும் மூன்றுலோகங்களுக்கு மாதாரபூதமுமான அந்தத்திவ்ய ஸ்தானத்தையடைந்தாள்; ஒகோ! என்ன அதிர்ஷ்டம்! என்ன மகிமை என்று துதித்தார்.

எந்தமனுஷ்யன் துருவசரித்திர கீர்த்தனஞ்செய்வானோ அவன் சகல பாப நிவர்த்தியுள்ளவனாய்ச் சொர்க்கலோகத்தில் வாசஞ்செய்வான்; அன்றியும் அவன் வானத்திலும் பூமியிலும் ஸ்தானப்பிரஷ்டனாகாமற் சகலஸௌபாக்கியங்களுமுண்டாய் தீர்க்காயுசாய்வாழ்வான்.

## தர்க்கசாஸ்திரவிஷயம்.

[உஉ௦ - வது பக்கத்தின் தொடர்ச்சி.]

இனி, கணாதமுனிவராலியற்றப்பட்ட நூலானது பிற்காலத்தில் பற்பல பெரியோர்களால் பற்பல விதமான நிபந்தனைகளைப் பெற்றமையால், அவைகளில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மதமெனப் பல மதங்களையுடையதாயிருந்தது. பின்பு சாலிவாகனசகம் பதினாறாவது நூற்றாண்டின் பிற்பாதியில் ஆந்திரதேசத்தில் கௌண்டினியபுரம் அல்லது கொண்டவீடு என்னும் சீமையிற் பிறந்து தர்க்கசாஸ்திர பாரங்கதராகிய அந்நம்பட்டர் என்னும் மகா பண்டிதர் மேற்கண்ட பற்பல மதங்களையும் பரிசோதித்துப் பதார்த்தங்களைக் குரோடீகரித்து இந்த சாஸ்திரத்தை முதலிற் படிப்பவர்க்கு எளிதில் விளங்கும் பொருட்டு தர்க்கசங்கிரகம் என்னும் பெயரினால் ஒருநூலும் அதற்குத் தர்க்கசங்கிரகதீபிகை என்னும் பெயரினால் ஒருவியாக்கியானமும் இயற்றியிருக்கின்றனர். இவ்வந்நம்பட்டர் மஹாபாஷியத்துக்கு கையடர் இயற்றிய வியாக்கியானத்துக்கு ஒரு உரையும் செய்திருக்கின்றனர். இத்தர்க்கசங்கிரகம் சிறுவரும் எளிதில் உணரும்படி மிகச்சுருக்கமாய்ச் செய்ப்பட்டமையால், தர்க்கசாஸ்திரம் படிக்கத்தொடங்குவோரெல்லோரும் இதனையே கற்றுவருகின்றனர். இதற்கு அநேக வியாக்கியானங்கள் உண்டு. அவற்றுள்,—

1. தர்க்கசங்கிரகதீபிகை.—இது மேற்குறித்தபடி அந்நம்பட்டராலே செய்யப்பட்டது. இதனை அந்நம்பட்டீயம் எனவும் சொல்லுவர்கள். இது தர்க்கசங்கிரகத்துக்குச் செய்யப்பட்ட வியாக்கியானங்கள் பலவற்றுள்ளும் மிக அரிதினுணரத்தக்கது. இது முந்நூற்றைம்பது கிரந்த முள்ளது. இந்த வியாக்கியானத்துக்கு ஐந்து வியாக்கியானங்கள் இருக்கின்றன. அவை யாவன:—

(1.) அநுமதீயம்.—இது மாத்துவராகிய அநுமதாசாரியராலே செய்யப்பட்டது. இவர் கர்ணாடர். சற்றேறக்குறைய நூற்றுமுப்பது வருடத்துக்குமுன் னிருந்தவர். இவ்வநுமதீயம் ஆறாயிரங்கிரந்தமுள்ளது.

(2.) நீலகண்டீயம்.—இதுபல்லாரியில் இருந்த ஸ்மார்த்தராகிய நீலகண்டசாஸ்திரியாராலே செய்யப்பட்டது. இவர் ஏறக்குறைய அறுபது வருடத்துக்குமுன் இருந்தவர். இந்நீலகண்டீயம் ஆயிரத்திருநூற்றைம்பது கிரந்தமுள்ளது. இதற்கு ஸ்மார்த்தராகிய இராமபத்திரபட்டராலே ராமபத்ரீயம் என ஒருவியாக்கியானம் செய்யப்பட்டிருக்கிறது.

(3.) தர்க்கசங்கிரகத்துக்கு நிருக்தி செய்த பட்டாபிராமசாஸ்திரியாரும் தர்க்கசங்கிரக தீபிகைக்கு ஒரு வியாக்கியானம் செய்தனர்.

(4.) முதுந்தபட்டீயம்.—இது முகுந்தபட்டராலே செய்யப்பட்டது.

(5.) தீபிகாப்ரகாசிகை.—இது தமிழ்நாட்டில் இருந்த ஸ்மார்த்தராகிய நரசிங்கசாஸ்திரியாராலே செய்யப்பட்டது. இவர் சித்தாந்த

முக்தாவலிக்குப் பிரபை என்னும் பெயரினுல் ஒரு வியாக்கியானமும் செய்தனர். இவர் ஏறக்குறைய எழுபதுவருடத்துக்கு முன்னிருந்தவர். பிரகாசிகை ஆருயிரங்கிரந்த முடையது.

2. நியாயபோதினி.—இது கௌடரும் தர்க்கபாஷாப்பிரகாசஞ் செய்தவருமாகிய கோவர்த்தனமிசிரராலே செய்யப்பட்டது. இது நானூறு கிரந்தமுடையது.

3. நிருக்தி.—இது தமிழ் நாட்டிலிருந்த ஸ்மார்த்தராகிய பட்டாபிராம சாஸ்திரியாராலே தமது புத்திரியின் பொருட்டுச் செய்யப்பட்டது. தர்க்க சங்கிரகத்துக்குள்ள வியாக்கியானங்கள் எல்லாவற்றுள்ளும் இது மிக எளிதினுணர்தற்பாலது. இவர் ஏறக்குறைய அறுபது வருடத்துக்கு முன்னேயிருந்தவர். இந்நிருக்தி அறுநூறு கிரந்தமுடையது.

4. சித்தாந்தசந்திரோதயம்.—இது கிருஷ்ணதூர்ஜடிதீக்ஷிதராலே செய்யப்பட்டது. தர்க்கசங்கிரகத்துக்குரிய வியாக்கியானங்களுள் தர்க்கசங்கிரகதீபிகையொழித்தொழிந்த மற்றெல்லாவற்றினும் இது மிக அரிதினுணர்தற்பாலது. இது ஆயிரத்து முந்நூறு கிரந்தமுடைத்து.

5. தர்க்கசங்கிரகசந்திரிகை—இது மகாராஷ்டிரராகிய முகுந்தபட்டராலே செய்யப்பட்டது. இது ஆயிரத்திருநூறு கிரந்தமுடைத்து.

6. பதகிருத்யம்—இது கௌட க்ஷத்திரியராகிய சந்திரசசிங்கராலே செய்யப்பட்டது. இது கங்கைக்கரையிலுள்ள நாடுகளிலே கற்கப்படுகின்றது. இது ஆயிரங்கிரந்தமுடைத்து.

7. தர்க்கசங்கிரகோபந்யாசம்.—இது மகாராஷ்டிர சந்நியாசியாகிய மேருசாஸ்திரியாராலே செய்யப்பட்டது. இது தார்க்கிகர்களாலே மிக நன்குமதிக்கப்படுகின்றது. இது ஐஞ்ஞூறு கிரந்தமுடைத்து.

இவையெல்லாம் சிறுநூல்கள். இந்தசாஸ்திரத்தில் ஒவ்வொருபிரகரணத்தையுங்குறித்தபெருநூல்கள்பலவுள. இந்நூல்களெல்லாம் வடமொழிப் பண்டித சமூகத்தில்மாத்திரம் பயன்பட்டுத் தமிழருக்குள் விளங்காமலிருந்தன. மக்களுக்கு நேத்திரஸ்தானமாயுள்ள இந்த சாஸ்திரமானது தமிழிலில்லையென்னுங் குறையை ஒருவாறு ஒழிக்கக் கருதி தர்க்கசங்கிரகத்தையும், தர்க்கசங்கிரகதீபிகை என்னும் அதன் வியாக்கியானத்தையும் ஸ்ரீ கைலாஸ பரம்பரைத் திருவாவடுதுறை நமச்சிவாயமூர்த்திகள் மரபில் சிவஞானசுவாமிகள் தமிழில் மொழிபெயர்த்தனர். ஆயினும், அவை சற்றேகடினநடையில் எழுதப்பட்டுப் பலர்க்கும் பயன்படாததனுல் இந்த சாஸ்திரவிஷயம்சுலபமானநடையில் ஒருவாறு எழுதி இதில்வெளிப்படுத்தப்படுகின்றது. கருதியபயன்காணப்படுமாகில், படிப்பவர்க்கு மேன்மேலும் இந்நூலறிவு விளங்கும்படி சிற்சிலப் பிரகரணங்களும் மொழிபெயர்த்துப் பிரகரஞ்செய்யப்படும்.

[தொடர்ச்சி.]

## அலங்காரவிஷயம்.

[உ௧௧ - வது பக்கத்தின் தொடர்ச்சி.]

தீரோ தாத்தனே தீரோத் ததனே
தீர லலிதனே தீர சாந்தனென்
றோதிய நாயகர் நால்வகை யென்ப.

அவருள்,—

1. கருத்தி னாழமுங் கருணையுங் கண்ட
பரிசெடுத் துரைத்தலுந் தற்புகழ் வின்மையும்
தீரமு முடையனே தீரோ தாத்தன்.

கருத்தினாழமாவது—இன்பதுன்பங்களில் விகாரமின்மை-(உதா):—

மணிமுடிநீகொள்கவெனமன்னர்பிரானுரைத்துழியு
மணிகசடைமுடியெனச்சிற்றன்னையுரைத்துழியுமோர்
வணமேயிராகவன்றன்வாண்முகத்துக்குறிநோக்கித்
துணைவருந்தங்கருத்துரைக்கத்துணியாதுநின்றனரே.

கண்டபரிசேடுத்துரைத்தல்.—ஏதிலரிடத்துங் கண்ட குணங்களை யெடுத் துரைக்கத்தகுமழுக்காறின்மை. (உதா):—

தன்பெருமைதனையுரைக்கிற்றலைவணங்கிமுகங்கோட்டும்
தன்பகைஞர்தங்குணத்தைத்தானெடுத்துத்தகவுரைக்கும்
துன்புறுத்தவரக்கனையுந்துணிக்கமனம்பதைத்துருகும்
வன்பொடேவரொதிர்த்திடினுமகிழ்ந்தேற்குமிராகவனே.

இதில் கருணைமுதலியவற்றையுங் காண்க.

2. கடுமையிறு மாப்பொடு தற்புகழ்த றானு
முடைய னாகுந் தீரோத் ததனே.

கடுமை-சினமிக்குறல். (உதா.):—

"கேளிதுநீயுங்காணக்கிளர்ந்தகோளரியின்கேழில்
தோளொடுதாளுநீக்கிநின்னையுந்துணித்தபின்னென்
வாளினைத்தொழுவதல்லால்வணங்குதன்மகளீரூட
னாளினுமுளவோவென்னவண்டங்கணடுங்கநக்கான்."

இதில் கடுமைமுதலியவற்றைக் கண்டுகொள்க.

[இக்கவி இரணியன்கூற்றாயினும், அரி என்பதற்குவானரமெனப் பொருள் கொண்டு இராவணன் அனுமானோடு கூடிவந்த விபீடணனை நோக்கிக்கூறிய தெனக்கொள்க.] இன்னும்,—

இருபதுபுயங்களுமிருந்திமாழ்கநீ
யொருமலையசைத்தனையொப்பையோவெமை
இருபுயத்தாற்பலமலைகொணர்ந்தியாங்
கருங்கடறூர்த்தனங்கருதுகென்னவே.

இஃது இராவணனைநோக்கி வானரர்கூறியதாம். இதிற் றற்புகழ்தல் நன்று காண்க.

3. சிந்தை யின்றிச் சீரிய போகா
னந்த முடையோன் தீரலலி தன்னே.

சிந்தையாவது - மனக்கவலை.

4. கவர்ச்சி யின்றிக் களிமனத் தனனுத்
தவத்துறை வோனே தீர சாந்தன்.

கவர்ச்சியாவது - புல்ன்வயப்படுதல்.

இருவர்க்குமுதாரணம்வருமாறு :—

நறுமலர்கற்பகச்சோலைநண்ணியரம்பையர்தம்மைநயந்துமேவி
யுறுகண்முனமுற்றவெல்லாமுடன்மறந்துவாழ்ந்தனர்காணும்பரெல்லாம்
* மறுவிலராய்மறையவர்க † ளைம்பொழுதுமறைவகுத்தமுறையிற்போக்கி
யிறுதியிலாவானந்தத்தாழ்ந்திருந்தாரிராமனரசியற்றுங்காலே.

இதில் முன்னடிகளை தீரலலிதனுக்கும், பின்னடிகளை தீரசாந்தனுக்குங் கொள்க.

இந்நாயகரெல்லாம் நவரசங்கட்கும்பொதுவாவார். [தொடர்ச்சி.]

## பொருளிலக்கணவிஷயம்.

[உக௨-வது பக்கத்தின் தொடர்ச்சி.]

### களவு.

இவ்விஷயம் பெரும்பாலும் அகப்பொருட்கிளவித்துறைகள் தலைவன் முதலியோர் மனதிற்றோன்றுமொழுங்கின்படி உரைக்கப்படுவதேயாம். இக்கிளவித்துறைகள் பலமணிகளும் ஓரினமாக ஒழுங்குபடக்கோக்கப்படுவதுபோலக் கோக்கப்படுதலின் கோவை எனப்படும். அதுதான் ஓர்கதைபோலவந்து நாடகத்துக்கேற்றலின் இத்தமிழ் நாடகத்தமிழென்னப்படும்.

இனி அக்கிளவித்துறைகள் மனதிற்றோன்றுமுறையாமாறு :—

உடன்பிறந்து உடன்வளர்ந்து நீருடனாடிச் சீருடன்பெருகி ஓலுடனூட்டப் பாலுடனுண்டு பல்லுடனெழுந்து சொல்லுடன்கற்றுப் பழமையும் பயிற்றியும் பண்பும் நண்பும் விழுப்பமும் ஒழுக்கமும் மாட்சியுமுடையார் பற்பனூருயிரவர் கண்ணுமனமுங்கவரும் ஒண்ணுதன்மகளிர் தற்சூழத் தாரகை

---

* மறுவிலாமையாவது - கவர்ச்சியின்மை. † ஐம்பொழுதாவன:—அபிகமனம், உபாதானம், இஜ்யை, ஸ்வாத்தியாயம், யோகம் என ஸ்ரீபாஞ்சராத்திரத்துட்கூறிய பகலின்பிரிவுகளாம். இவ்வைந்தும் கைங்கரியகாலம். இவற்றுள்முதலாவது-கடவுளைச்சரணம்புக்குப்பிரார்த்தித்தல்; இரண்டாவது-பூசைக்குவேண்டுவன தேடல்; மூன்றாவது - பூசித்தல்; நான்காவது - மந்திரங்கள்ஜபித்தல்; ஐந்தாவது - தியானித்தல்.

நடுவட்டண்மதிபோலப் பொழில்விளையாட்டு விருப்பாற்சென்ற பொருவிறந்த
தலைமகள் பொழிலிடம்புகுதலும், அவளாயங்களும் ஒருவர் ஒருவரின்முன்
னர் தழைவிழையத்தக்கன தொடுத்துமென்றும், கண்ணி தண்ணறுநாற்றத்
தனசெய்துமென்றும், போது மேதக்கனகொய்துமென்றும், மயிலொடு மா
றாடுதுமென்றும், குயிலொடு மாறுகூவுதுமென்றும், அருவியாடி யஞ்சுனை
குடைதுமென்றும், வாசமலர்க்கொடியி லூசலாடுதுமென்றும் பரந்து, அப்பா
லுள்ளா ரிப்பாலுள்ளார்கொல்லோவென்றும், இப்பாலுள்ளா ரப்பாலுள்
ளார்கொல்லோவென்றும் இவ்வகைநினைத்து, அவளைத்தமியளாய்விட்டுப்
பிரிய, அவள் சந்தனமுஞ் சண்பகமுந் தேமாவுந் தீம்பலவும் ஆசினியு மசோ
குங் கோங்கும் வேங்கையும் குரவமும் விரிந்து, நாகமுந் திலகமும் நறவும்
நந்தியும் மாதவியும் மல்லிகையும் மௌவலொடு மணங்கமழ்ந்து, பாதிரி
யும் பரவைஞாழலும் பைங்கொன்றையும் பிணியவிழ்ந்த பொரிப்புன்கும்
புன்னாகமும் உருக்கொடுமுகைசிறந்து, வண்டறைந்து, தேனார்ந்து, வரிக்
குயில்களிசைபாடத், தண்டென்றலிடைவிராய்த் தனியவரை முனிவுசெய்
யும் பொழிலதுநடுவண் ஓர்மாணிக்கச்செய்குன்றின்மேல் விசும்புதுடைத்
துப் பசும்பொன்பூத்து வண்டுதுவைப்பத் தண்டேன் றுளிப்பதோர் வெறி
யுறு நறுமலர் வேங்கை கண்டாள்; கண்டு பெரியதோர் காதல்களிகூர்ந்து
தன் செம்மலர்ச்சீறடிமேல் சிலம்புகிடந்து சிலம்புபுடைப்ப, அம்மலரணிக்
கொம்பர் நடைகற்பதெனநடந்து சென்று, நறைவிரி வேங்கை நாண்மலர்
கொய்தாள்; கொய்தவிடத்து மரகதமணிவிளிம்படுத்த மாணிக்கச்சுனைமருங்
கினதோர் மாதவிவல்லிமண்டபத்துப் போதுவேய்ந்த பூநாறு கொழுநிழற்
கீழ்க் கடிக்குருக்கத்திக்கொடிபிடித்துத் தகடுபடு பசும்பொற் சிகரங்க
ளின் முகடுதொடுத்து வந்திழிதரும் அருவிபொன்கொழித்து மணிவரன்றி
மாணிக்கத்தொடுவயிரமுந்தி அணிகிள ரருவி யாடகப் பாறைமேல் அதிர்
குரன்முரசின்கணிரட்ட, வண்டுந் தேனும் யாழ்முரல, வரிக்குயில்களிசை
பாடத், தண்டாது தவிசுபடப்போர்த்ததோர் பளிக்குப்பாறைமணித்தலத்து
மிசை நீலஆலவட்டம்விரித்தாற்போலத் தன்கோலக்கலாபங் கொளவிரித்து
முளையிளஞாயிற்று இளவெயிலெறிப்ப ஓர் இளமயிலாடுவது கண்டுநிற்க;—

கற்கந்தும் எறிபோத்துங் கடுங்கண் யானையுந் தறுகட்பன்றியுங் கருவரை
யும் இருநிலனும் பெருவிசும்புமனையார் ஆளி மொய்ம்பினர் அரிமான் றுப்
பினர் பற்பனூறுயிரவர் கூர்வேலிளையர் தற்சூழ வேட்டவிருப்பாற்சென்ற
தலைமகன் அக்கூர்வேலிளையரொடு குளிர்மலைச்சாரல்வேட்டம்போய் விளை
யாடுகின்றான், ஆண்டெழுந்ததோர் கடுமாவின்பின்னோடிக், காவலிளையரைக்
கையகன்று, நெடுமான்றேரொடு பாகனை நிலவுமணற்கானியாற்று நிற்
கப்பணித்துத், தொடுகழல் அடியதிரச் சுருளிருங் குஞ்சி பொன்ஞாணிற்
பிணித்துக், கடிகமழ் நறுங்கண்ணிமேற்கொண்டு, வண்டுமொணமயர, அஞ்
சாந்தின் நறுநாற்றம் அகன்பொழிலிடைப்பரந்துநாற, அடுசிலையொருகணை
யேந்தி வடிவுகொண்ட காமன்போலச்சென்று அவள் நின்ற இரும்பொழில்
புக்கு,

(1) அவளைக்கண்ணுற்று இஃதொருவியப்பென்னென்றலாகிய காட்சியும்;

(2) கண்டபின் இத்துணை மேதகவுடையளாய இவள் வரையரமகள் கொல்லோ, வானவர்மகள்கொல்லோ, நீரரமகள்கொல்லோ, அன்றிமக்களுள் ளாள்கொல்லோ என்று ஐயப்படும் ஐயமும்;

(3) ஐயுற்றபின்னர் விண்ணகத்ததன்றி மண்ணகத்ததாய்ப், பயின்றதன் மேலல்லது செல்லாத தாதுதும்வண்டும், ஒருவரா லிழைக்கப்பட்ட அணி கலன்களும், தோள்முதலியவற்றெழுதுந் தொய்யிற்கொடியும், கைக்கொண்டு மோந்துயிர்க்குங் கழுநீர்ப்பூவும், கண்டறியாத வடிவுகண்ட அச்சத்தாற் பிறந்த தடுமாற்றமும், கண்ணிவாடுதலும், சாந்து புலர்தலும், கண்ணிமைத் தலும், கால் நிலந்தோய்தலும், நிழலீடும், நுதல்வியர்த்தலும், அவயவமியங்க லுமுதலிய மக்கட்குரிய குணங்கண்டு இவள் மக்களுள்ளாளென்றுதுணியும் துணிவும் [தெளியுந் தேளிவும்];

(4) தெளிந்தபின்னர் மக்களுள்ளாளென்றுநயந்து இடையில்லைகொல் லென்றநெஞ்சிற்கு எதுக்காட்டி இடையுண்டென்று சென்றெய்த நினையா நிற்கும் நலம்பாராட்டலும் [நயப்பும்];

(5) தலைமகள்வேட்கை அவள் பார்வையாற் றன்னிடத் துண்டென்று குறிப்பானறியும் குறிப்பறிதலும் [உட்கோளும்];

(6) உட்கொண்டுநின்று, என்னிடத்து விருப்பத்தை யுடைய இவளைத் தந்த தெய்வத்தையல்லது வேறொருதெய்வத்தை யான் வியவேனெனத் தெய்வத்தை மகிழ்ந்துகூறுநிற்கும் தேய்வத்தைமகிழ்தலும் ஆகிய இவை முன்னர் நிகழாநிற்கும்.

இவ்வளவும் (தலைவிவேட்கைக்குறிப்புத் தன்மேனிகழ்வதனைத் தலைவன் அறிதற்குமுன்னே தன்காதன் மிகுதியாற் கூறுவன)வாதலின் ஒருதலைக்காம மாகிய கைக்கிளையாம்.

இவற்றிற்கு முறையே செய்யுள் வருமாறு:—

## 1.—காட்சி.

1. திருவளர் தாமரைசீர் வளர்காவிகளீசர்தில்லைக்
குருவளர்பூங்குமிழ்கோங்குபைங்காந்தள்கொண்டோங்குதெய்வ
மருவளர்மாலையோர்வல்லியினொல்கியனநடைவாய்ந்
துருவளர்காமன்றன்வென்றிக்கொடிபோன்றொளிர்கின்றதே.

---

1. திருவளருந் தாமரைப்பூவினையும் [முகம்], அழகுவளரு நீலப்பூக்களை யும் [கண்கள்], ஈசர்தில்லைவரைப்பின்கணுண்டாகிய பூங்குமிழினது நிறம் வளரும் பூவினையும் [நாசி], கோங்கரும்புகளையும் [தனங்கள்], செவ்விக் காந்தட்பூக்களையும் [அங்கைகள்] உறுப்பாகக்கொண்டு, மேம்பட்டதெய்வ மணம் வளரும் மாலை [பெண்], ஓர்வல்லிபோலநுடங்கி, அன்னத்தின் நடை போல நடைவாய்ந்து, வடிவுவளரும் காமனது வெற்றிக்கொடிபோன்று

2. பூமருகண்ணிணைவண்டாப்புணர்மென்முலையரும்பாத்
தேமருசெவ்வாய்தளிராச்செருச்செந்நிலத்தைவென்ற
மாமருதானையெங்கோன்வையைவார்பொழிலோர்கலந்த
காமருபூங்கொடிகண்டேகளித்தவெங்கண்ணிணையே.

3. புயலேசுமந்துபிறையேயணிந்துபொருவிலுடன்
கயலேமணந்தகமலமலர்ந்தொருகற்பகத்தின்
அயலேபசும்பொற்கொடிநின்றதால்வெள்ளையன்னஞ்செந்நெல்
வயலேதடம்பொய்கைசூழ்தஞ்சைவாணன்மலயத்திலே.

4. பூவும்பழுத்தசெழுந்திங்கனியும்பொழியமுத
மேவுங்குடங்களிரண்டுடனேயிருமீனுங்கொண்டு
சேவுந்தழகர்திருவெங்கைவாணர்சிலம்பின்மலர்
தூவும்பொழிலிலெதிர்ப்பட்டதாலொருதூமணியே.

5. சீர்கொண்டதாமரைப்போதைந்திரண்டுசெழுமுகைநல்
லேர்கொண்டநீலமிரண்டோர்குமுதமிவற்றெடுதெண்

---

விளங்காநின்றது, என்னவியப்போ! என்றவாறு. [இதன்விரிவெல்லாம் திருக்கோவையார் உரையுட்காண்க.]

2. தாமரைப் பூவிதழ்போன்றவிணைக்கண்களையே தன்னிடத்துப்பயிலும் வண்டாகவும், நெருங்கிய மெத்தெனவையுடைய கொங்கைகளையே தன்னிடத்தரும்பிய அரும்புகளாகவும், இனிமைபொருந்திய செவ்வாயையே தன்னிடத்துள்ள தளிராகவும்கொண்டு, செயற்கையழகுவிரவப்பெற்ற இயற்கையழகுவாய்ந்த வோர் பூங்கொடியைப், பகைவரதுபோர்க்களமாகியசெந்நிலத்தைக்கடந்த பெருமைபொருந்திய சேனையையுடைய எம்மிறைவனது வையைநதிநீராற்செழித்தோங்கிய பொழிலின்கட்கண்ணுற்று எம்மிருகண்களும் களித்தன, எ - று.

3. வெண்மையாகிய அன்னப்புட்செறிந்த செந்நெல் வயலும் பெருவாவியும் சூழ்ந்த தஞ்சைவாணன்பொதியவெற்பில், ஒருகற்பகத்தருவின்பக்கத்தில் ஒரு பசும்பொற்கொடி [பெண்] புயலைத்தாங்கி [கூந்தல்], பிறையைத்தரித்து [நுதல்], போர்செய்யும் விற்களுடன் [புருவங்கள்] கெண்டைமீன்கள் [கண்கள்] பொருந்திய தாமரை [முகம்] மலர்ந்து என்கண்ணெதிரே நின்றது, எ - று.

4. ஏறூருகின்ற அழகராகிய திருவெங்கைத் தலத்தில் வாழ்பவரது மலையினிடத்து மலர்களைச் சொரியும் பொழிலகத்து ஓர்தூயமணியானது [பெண்], தாமரைப்பூவையும் [முகம்], பழுத்தசெழுமையாகிய மதுரம்பொருந்திய கோவைக்கனியையும் [அதரம்], பெருகுகின்ற அமுதம்பொருந்திய குடங்களிரண்டுடனே [தனங்கள்] இணைக்கயல்களையும் [கண்கள்] தன்னிடத்துக்கொண்டு எமக்கு எதிர்ப்பட்டது, எ - று.

5. நிர்மலமாகிய கங்கையையேற்றுக்கொண்ட ஜடாபாரத்தையுடைய கோடீச்சுரேசரது பெரியமலைமேலுள்ள மேகத்தின் தன்மையைக்கொண்டி

ணீர்கொண்டவேணியர்கோடீச்சுரேசர்நெடுவரைமேற்
கார்கொண்டகாவினிடையிலொராவிநங்கண்ணுற்றதே.

இக்காட்சி குறிஞ்சிக்கண்ணிகழ்வதொன்ருதலின் அந்நிலக் கருப்பொருளானே அதற்கிலக்கியங்கூறவேண்டுமென்பது மரபாயினும் மற்றைநிலக் கருப்பொருளும் விரவிவர இலக்கியங்கூறுவதும் வழுவன்று; ஓரிடத்தோர் கலியாண முண்டாயின் எல்லாரிடத்துமுள்ள ஆபரணங்களெல்லாம் அவ்விடத்துக்கூடி அக்கலியாணத்தைச்சிறப்பித்தாற்போலப் பலநிலக்கருப்பொருளும்கூடி அக்குறிஞ்சியைச் சிறப்பித்து நிற்றலால், என்பர்.]

[தொடர்ச்சி.]

## பாஷாவிஷயம்.

[அ௬ - வது பக்கத்தின் தொடர்ச்சி.]

பின்பு நக்கீரதேவர் தாங்கற்றநூலினை ஐயமறமற்றப்புலவர்கட்கும் புலப்படுத்திக்கொண்டு அவர்களுடன் சங்கமிருக்கையில் அப் பாண்டிநாடு பன்னிரண்டு வருஷம் மழை யில்லாது வருந்த, அப்போது செங்கோல்செலுத்திவந்த உக்கிரப்பெருவழுதியென்னும் பாண்டியன் சங்கப்புலவரெல்லாரையும் வரவழைத்துப், புலவர்களே! இப்போது உங்களுக் கறிந்த தேசங்களிற் போயிருந்து என்னுடு நன்னுடான நாளில் என்னை மறந்துவிடாமல் வந்து சேருங்களென்று வேண்டிக்கொண்டான்.

அதுகேட்டுச் சங்கத்தார் அவர்களுக் கிஷ்டமான தேசங்களிற் சென்ருர்கள். அப்பொழுது நக்கீரதேவர் வடதிசையிலே இமயமலைக்குச்சமீபத்தினுள்ள ஒரு பெருங்காட்டினுள்ளே செல்லும்போது, அங்கேயொருதடாகத்தைக்கண்டு அதில் நீராடிச் சிவபூசைசெய்துகொண்டிருக்கையில்; அத்தடாகக்கரையிலுள்ள தெய்வத்தன்மைபொருந்திய ஓராலமரத்திலிருந்து ஒரு பழுப்பு அவருக்குமுன்னே பாதிநீரிலும் பாதிநீர்ப்புறத்திலுமாக விழுந்தது. நீரிலேவிழுந்தபாதி மீன்வடிவமும் நீர்ப்புறத்துவிழுந்தபாதி பறவைவடிவமும் அடைந்து இருபுறமுமிழுக்க, நக்கீரதேவர் அவ்வாச்சரியமான காரியத்திலே கருத்துச் செலுத்திஞர்; அதனுலே சிவபூஜைக்குத் தவறுண்டாயிற்று. அதன்முன்பு அவ்விடத்தே அப்படியே சிவபூஜையில்வழுவினவர்களாகிய தொளாயிரத்துத் தொண்ணூற்ருென்பதின்மரை ஒருமலைக்குகையில்அடைத்து, இன்னும் ஒருவன்வேண்டுமெனக் காத்திருந்த ஒருகொடிய

ருக்கிற [இருண்டிருக்கிற] சோலைகடவில், அழகைத்தம்மிடத்தே கொண்ட ஐந்துதாமரைமலர்களும் [முகம் - க, அங்கைகள் - உ, அடிகள் - உ], இரண்டுசெழுமை பொருந்திய அரும்புகளும் [தனங்கள்], இரண்டு நல்ல அழகு பொருந்தியகருங்குவளைகளும் [கண்கள்], ஒருசெவ்வல்லிமலரும் [வாய்] ஆகிய இவற்றுடனே யொருதடாகம் [இடை இல் ஓர் ஆவி - இடையில்லாத வோருயிர்] நமது கண்ணுக்குப் புலப்பட்டது, எ - று.

பூதமானது நக்கீரனையெடுத்துக்கொண்டுபோய் அக்குகையில் அடைத்து, ஆயிரவராக்கித் தன்னியமப்படி அகப்பட்ட அவ் வாயிரவரையும் உண்ணு தற்கு நீராடப்போயிற்று. அச்சமயத்தில் முன் அடைபட்டிருந்தவரெல் லாரும் நக்கீரதேவனைப்பார்த்து, ஐயா! நாங்களெல்லாரும் நெடுங்காலமாக இப்பூதத்தின் சிறையில் அகப்பட்டிருந்தும், இப்பூதத்தாலே உணவுமுதலி யவைபெற்று உயிர்பிழைத்திருந்தோம்; இன்றைக்கு உம்மாலே இப்பூதத் துக்கு இரையாகுங்காலம் நேர்ந்தது, என்று அழுதார்கள். நக்கீரதேவர் அது கேட்டு மனமிரங்கி முருகக்கடவுளைக்குறித்துத் திருமுருகாற்றுப்படை என் னும் ஓர்பிரபந்தம்பாடி முருகக்கடவுளைத் தரிசித்து அவர்களெல்லாரையுங் காப்பாற்றி யப்பாற் சென்றனர்.

பன்னிரண்டு வருஷத்திற்குப் பின் நாடுமெலிய மழைபெய்து நல்விளைவு விளைந்து நாடு செழித்து நன்னுடானபின் பாண்டிய ராஜன் இனி நூல்வல்ல சங்கத்தாரைக் கொண்டுவாருங்களென்று தூதுவரைத் திசைதோறும் அனுப்ப அவர்போய் எல்லாத்தேசங்களிலும் தேடி எழுத்ததிகாரமும் சொல்லதிகார மும் யாப்பதிகாரமும் வல்லவரைக் கண்டு அழைத்துவந்துவிட்டுப் பொரு ளதிகாரம் வல்லவரை யெங்குந்தேடியும் அகப்படவில்லையென்று சொல்லி னர். அப்போது அவ்வரசன் அதிகக் கவலையுற்று, எழுத்தும் சொல்லும் யாப்பும் ஆராய்வது பொருளதி காரத்தின் பயன் அறிதற் கல்லவோ? பொரு ளதிகாரம் நமக்குக் கிடையாவிட்டால் ஏனையமூன்றுங் கிடைத்துப் பய னென்னவென்றுசொல்லி வருந்த, அதனைத் திருவாலவாயான் திருவுளங் கொண்டு "அன்பினைந்திணை" என்னுஞ்சூத்திரமுதலிய அறுபது சூத்திரங் களினால் ஓரகப்பொருணூல் செய்தருளி மூன்றுசெப்பேட்டிலெழுதிப் பீடத் துக்கீழிட்டருளினர். அது களவியல் எனவும், இறையனரகப்பொருள் எனவும் பெயர்பெறும். அன்று காலையில் தேவாலயத்துப் பரிசாரகன் ஆலய மெங்குந் திருவலகிட்டு நீர் தெளித்துப் பூவிட்டு, பீடத்தின்கீழென்றும் திரு வலகிடாதவன் அன்று தெய்வதக் குறிப்பினால் பீடத்தின்கீழ் திருவலகிட் டான். அப்போது அத்திருவலகோடு செப்பேடுகளும் வெளிப்பட்டன. வெளிப்பட்ட ஏடுகளை எடுத்துப் பார்க்குமளவில் வாய்ப்புடையதாகிய பொரு ளதிகாரமாகக் காணப்பட்டது. அரசன் பொருளதிகார மின்மையைக் குறித்துக் கவலைப்படுகின்றதை அப்பரிசாரகன் அறிந்து அதனை யெடுத்துக் கொண்டு தன்வீட்டிற்குச்செல்லாமல் அரசன்கோயிற்றலைக்கடைச்சென்று நின்று வாயில்காப்போருக்குத் தன்வரவையுணர்த்த அக்காவலாளர்சென்று அரசனுக் கறிவிக்க அரசன் அப்பரிசாரகபிராமணனை வாருமென்றழைக் கப் பிராமணன் உள்ளே சென்று அச்செப் பேட்டினைக் காட்ட அதனை யிரு கையுமேந்தி வாங்கிப்பார்த்துப் பொருளதிகாரமிது, இதனை நமது சோமசுந் தரக்கடவுள் நமதிடுக்கண் கண்டு அருளிச் செய்தன ரென்று அத்திசை நோக் கித்தொழுது நின்று சங்கத்தாரை அழைப்பித்து இது நமது பெருமான் அரு ளிச்செய்த பொருளதிகாரம், இதனைக் கொண்டுபோய்ச் சங்கப்பலகை ஏறி யிருந்து பொருளாய்ந்து வாருங்களென்றனன். அவர்களும் அப்படியே

அதைவாங்கிப் போய்த் தனித்தனியே அதற்கு உரையிட்டு, தத்தம் உரையே சிறந்ததென்று சிறப்பித்துக்கொண்டு சில நாள்கழித்தும் ஒருநாள் யாவரும் ஒருமித்து அரசனிடஞ்சென்று யாமியற்றிய உரைகளையெல்லாங் கேட்டு இவற்றுள் எவ்வுரை சிறந்ததென்று நிர்ணயிக்கத்தக்க ஓர் காரணிகனைக் கொடுக்கவேண்டுமென்று கேட்க,அரசன் உங்களுக்கொரு காரணிகனை எங்குத் தேடுவேன்; உங்களுக்கொப்பாவார் ஒருவருமில்லையே! என்று சொல்லப் பின்பு இச்சூத்திரஞ் செய்த ஆலவாயிலவிர்சடைக்கடவுளிடஞ் சென்று எமக்கோர் காரணிகனைத்தரல்வேண்டு மென்று விண்ணப்பஞ்செய்ய, சுவாமியினுடைய திருவருளால் இம்மதுரை வைசியர் மரபில் உப்பூரிகுடிகிழான் மகனாகத்தோன்றி ஐந்து பிராயமுள்ள உருத்திரசன்மனென்று ஒரூமைப் பிள்ளை யிருக்கின்றனன்; 'அவன் குமாரதேவன் சாபத்தாற் றோன்றினவன்; ஆதலால் அவனை அத்தன்மையனென்றிகழாது அழைத்துப்போய் ஆசனத்திருத்தி நீவிர் கீழிருந்து சூத்திரப் பொருளைச் சொல்லுவீராயின் அவன் மெய்யுரைகேட்டவிடத்துக் கண்ணீர்மல்கி மெய்ம்மயிர் பொடிப்பன், அல்லாவிடத்துச் சும்மாவிருப்பன்எனச் சொல்லிய அசரீரிவார்த்தை கேட்டு யாவரும் எழுந்து ஆலயத்தைவலம்வந்து உப்பூரிகுடி கிழானிடத்திற்சென்று இவ்விருத்தாந்தத்தை யறிவித்து ஐயனாகிய உருத்திரசன்மரைத்தரல்வேண்டுமென்று வேண்டி அழைத்துப்போய், அவருக்கு வெண்ணூசுடுத்தி வெண்பூச்சூட்டி வெண்சாந்தணிந்து, பின்பவரைச்சங்கப்பலகையிலேற்றித் தாம் கீழிருந்து சூத்திரத்தின்பொருள்களை ஒவ்வொருவராக உரைப்ப அவ்வுருத்திரசன்மர் அவற்றைக்கேட்டுச் சும்மாவிருந்து, மதுரைமருதநாகனார் உரைத்தவிடத்து ஒரோவிடத்துக்கண்ணீர்வார்ந்து மெம்மயிர்நிறுத்திப், பின்பு கணக்காயனார் மகனார்நக்கீரர் உரையைக்கேட்டவிடத்து கண்ணீர்வார மெய்ம்மயிர்சிலிர்ப்பவிருந்தார். அப்போது மற்றப் புலவர்கள் தம்முரைகளையெல்லாங் கிழித்தெறிந்துவிட்டு நக்கீரருரையே மெய்யுரையென்று கொண்டாடி உருத்திரசன்மருக்கு வெகுவித உபசாரங்கள் செய்து மறுபடியும் அவரை அவரிருப்பிடம் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டுத் தாங்கள் பழையபடி சங்கமிருந்து நூலாராய்ந்து வந்தனர்.

அங்ஙனம் நூலாய்ந்துவந்த சங்கப்புலவர்களின் பெயர்வருமாறு:—

1. கபிலர்— 2. பரணர்—3. நக்கீரர்—4. மாமூலனார்—5. கல்லாடர்—6. சீத்தலைச்சாத்தனார்— 7. மருத்துவன்றாமோதரனார்— 8. நாகன்றேவனார்— 9. அரிசிற்கிழார்—10. பொன்முடியார்— 11. கோதமனார்—12. நத்தத்தனார்— 13. முகையலூர்ச்சிறுகருந்தும்பியார்— 14. ஆசிரியர்நல்லந்துவனார்—15. கீரந்தையார்—16. சிறுமேதாவியார்—17. நல்கூர்வேள்வியார்—18. தொடித்தலைவிழுத்தண்டினார்—19. வெள்ளிவீதியார்—20. மாங்குடிமருதனார்—21. எறிச்சலூர்மலாடனார்—22. போக்கியார்—23. மோசிகீரனார்—24. காவிரிப்பூம்பட்டினத்துக்காரிக்கண்ணனார்—25. மதுரைத்தமிழ் நாயகனார்—26. பாரதம்பாடியபெருந்தேவனார்—27. உருத்திரசன்மகண்ணர்—28. பெருஞ்சித்தனார்—29. நரிவெருத்தலையார்—30. மதுரைத்தமிழாசிரியர்

செங்குன்றூர்க்கிழார்— 31. மதுரையறுவைவாணிகர்இளவேட்டனார்— 32. கவிசாகரப்பெருந்தேவனார்—33. மதுரைப்பெருமருதனார்—34. கோவூர்க்கிழார்—35. உறையூர்முதுகூற்றனார்—36. இழிகட்பெருங்கண்ணனார்—37. செயிர்க்காவிரியார்மகனார்சாத்தனார்—38. செயலூர்க்கொடுஞ்செங்கண்ணனார்—39. வண்ணக்கஞ்சாத்தனார்—40. களத்தூர்க்கிழார்—41. நச்சமனார்—42. அக்காரக்கனிநச்சமனார்—43. நப்பாலத்தனார்—44. குலபதிநாயனார்—45. தேனீக்குடிக்கீரனார்—46. கொடிஞாழன் மாணிபூதனார்—47. கவுணியனார்—48. மதுரைப்பாலாசிரியனார்—49. ஆலங்குடிவங்கனார்.

இனி இக்கடைச்சங்கத்தாருள் நக்கீரர்நீங்கிய மற்ற புலவர்களுள் கல்லாடர் என்பவர் கல்லாடம் என்று ஒருநூல் திருக்கோவையாருக்குச் சமர்த்தனமாகச்செய்திருக்கிறார் என்றுசொல்லுகிறார்கள். அந்நூலிலே "நண்ணியபாதி" என்னுஞ்செய்யுளில்,—

"சமணக் கணக்கர் மதிவழி கூறா
துலகியல் கூறிப் பொருளிது வென்ற
வள்ளுவன் றனக்கு வளர்கவிப் புலவர்முன்
முதற்கவி பாடிய முக்கட் பெருமான்"

என்றுகூறப்பட்டிருப்பதால், அது கடைச்சங்கத்துள் திருக்குறளரங்கேறிய பின்னரேசெய்யப்பட்டதென ஏற்படுகின்றது.

பாரதம்பாடிய பெருந்தேவனார் என்பவர் பாரதவெண்பா என்று ஒருநூல் செய்திருக்கிறார். அது எண்பதினாயிரஞ் செய்யுளாலமைந்த தெனவும், அறுபதினாயிரஞ்செய்யுளாலமைந்ததெனவும், பதினாயிரஞ்செய்யுளாலமைந்த தெனவும், பலவாறாகக் கூறுகின்றனர். இந்நூல் பெரும்பாலும்வெண்பாவாலானதாயினும், இடையிடையே அகவற்பாவும் கட்டுரையும் விரவியதாயிருக்கின்றது. இப்போது இந்நூல் உத்தியோகபருவந்தொடங்கி யுத்தபருவத்திற் சிறிதுதூரம் வரைக்குமே யகப்படுகின்றது; முழுதுங்கிடைப்பதருமை.

ஆசிரியர் நல்லந்துவனார் என்பவர் கலித்தொகை என்று ஓர் நூல்செய்திருக்கின்றனர். அது சொல்லழகும் பொருட்பொலிவும் பொருந்தியதாய் அகப்பொருளிலக்கணத்திற் கிலக்கியமாயிருத்தலின் அதனைப் பொருளதிகார வுரைமுதலியவற்றுள் நச்சினார்க்கினியர் முதலாயினோர் பலவிடத்தும் உதாரணமாக எடுத்தாண் டிருக்கின்றனர்.

மாமூலனார் மாமூலம் என்று ஒருநூல் செய்திருக்கிறதாகவும் கேள்வி.

இவ்வாறே மற்றவர்களும் தனித்தனியே நூல் செய்திருக்கலாம்; அவை இக்காலத்து உள்ள இடமும் பெயருந் தெரியாமல் மறைந்து கிடக்கின்றன. ஆயினும், இருநூற்றைந்துபுலவர்களாற் பாடிமுடிக்கப்பெற்ற தொகைச்செய்யுளாகிய குறுந்தொகை என்னும் நூலுள் கபிலர், பரணர், நக்கீரர், மாமூலனார், கல்லாடர், வெள்ளிவீதியார், மாங்குடிமருதனார், மோசிகீரனார், மதுரையறுவைவாணிகர் இளவேட்டனார், கோவூர்க்கிழார், ஆலங்குடி வங்கனார் என்னும் இப்புலவர்களும் பாடியனவாக இடையிடையே சிலபாட்டுக்கள் காணப்படுகின்றன.

[தொடர்ச்சி.]